பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

16 11 2024 **SATURDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி நைஜீரியா, பிரேசில், கயானா நாடுகளுக்கு ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டு சென்றார்.

2. நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்கள் பங்கேற்க வேண்டும் என்று மத்திய பால்வளத்துறை இணையமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கூட்டுறவுத்துறை மூலம் பல்வேறு கடன் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. மும்பை சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அடில் கல்யாண்பூர் - பிரஜ்வால் தேவ் இணை பட்டம் வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி நைஜீரியா, பிரேசில், கயானா நாடுகளுக்கு ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக புதுதில்லியிலிருந்து இன்று புறப்பட்டு சென்றார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள இந்தியாவின் நட்பு நாடான நைஜீரியா நாட்டிற்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த பயணம் இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு உதவிடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நைஜீரியாவில் உள்ள இந்தியா வம்சாவளியினரை சந்தித்து கலந்துரையாட ஆவலுடன் உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நைஜீரியா பயணத்திற்கு பின்னர் பிரேசில் செல்லும் பிரதமர், ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டுக்கு இடையே பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து விவாதிக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கயானா நாட்டு அதிபர் திரு முகமத் இர்பான் அலியின் அழைப்பை ஏற்று செல்லும் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார்.

இந்த பயணத்தின்போது பல்வேறு துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்தும் விவாதிக்க உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பின்னர், அங்கு நடைபெறவுள்ள கரீபியன் கூட்டமைப்பு நாடுகள் பங்கேற்கும் உச்சிமாநாட்டிலும் பிரதமர் பங்கேற்கிறார்.

கடந்த 50 ஆண்டுகளில் இந்திய பிரதமர், கயானா நாட்டிற்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

<<<<<<>>>>>

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்கள் பங்கேற்க வேண்டும் என்று மத்திய பால்வளத்துறை இணையமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையை அடுத்த வேலப்பன்சாவடியில் தனியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு மாணவ, மாணவியருக்கு பட்டங்களை வழங்கி அவர் உரையாற்றினார்.

மாணவர்கள் தங்களது இலக்குகளை எட்ட தொடர் முயற்சிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கல்வி கற்பித்த ஆசிரியர்களின் சிறப்புகள் குறித்தும் மாணவர்களிடம் திரு ஜார்ஜ் குரியன் விரிவாக எடுத்துரைத்தார்.

<<<<<<>>>>>

கூட்டுறவுத்துறை மூலம் பல்வேறு கடன் திட்டங்களை தமிழக அரசு சிறப்பாக செயல்படுத்தி வருவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் கலந்துகொண்ட அமைச்சர், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 184 கோடி ரூபாய் அளவிலான கடனுதவிகளை வழங்கினார்.

அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் கூட்டுறவு நியாய விலைக்கடைகள் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கால்நடை பராமரிப்புக்காக 21 கோடி ரூபாயும், பயிர்க்கடனாக 385 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

கூட்டுறவு சங்கங்கள் அனைத்துத்தரப்பினரும் பயனடையும் வகையில் மக்கள் இயக்கமாக செயல்பட்டு வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் கலந்துகொண்ட அமைச்சர், 163 பயனாளிகளுக்கு ஒன்பது கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கி பேசினார்.

*(சவுண்ட் பைட் - எ வ வேலு – 49 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இன்று நடைபெற்றது.

வாக்குச்சாவடிகளில் நடைபெற்ற இந்த முகாம்களில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் முகவரி மாற்றம் போன்றவற்றை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

நாளையும், இத்தகைய சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதேபோல், வரும் 23 மற்றும் 24ஆம் தேதிகளிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், அடுத்த 24 மணிநேரத்தில் விழுப்புரம், கடலூர், புதுச்சேரி மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறினார்.

*(வாய்ஸ் பைட் - செந்தாமரை கண்ணன் - 53 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

நாகையிலிருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு இயக்கப்பட்டு வந்த சிவகங்கை கப்பல் சேவை பருவநிலை காரணமாக அடுத்த மாதம் 18-ஆம் தேதிவரை நிறுத்தப்பட்டுள்ளது.

பின்னர் கப்பல் சேவையை மீண்டும் தொடங்குவது குறித்த அறிவிப்பை அதன் நிர்வாகம் வெளியிடும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - செல்வன் ஜெபராஜ் - 25 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

ராணிப்பேட்டை மாவட்டத்தில் சுமார் 71 கோடி ரூபாய் நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம், 19 ஆயிரத்து தொள்ளாயிரத்து 94 பேர் பயனடைந்துள்ளதாகவும் மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி தெரிவித்துள்ளார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டம் கோவூர் ஊராட்சி அம்பாள் நகர் அங்கன்வாடி மையத்தில் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் இன்று வழங்கினார்.

---------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பட்டய கணக்காளர் தேர்வுக்கு பயிற்சி பெற விரும்பும் ஷெல்யூல்டு மற்றும் பழங்குடியின மாணவர்கள் தாட்கோ இணையதளத்தில் இம்மாத இறுதிக்குள் விண்ணப்பிக்கலாம் என அம்மாவட்ட ஆட்சியர் திருமதி சரயூ தெரிவித்துள்ளார்.

----------------

திருப்பூர் மாநகராட்சியில் 250-க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு சமபந்தி விருந்து வழங்கும் நிகழ்ச்சியை மேயர் திரு தினேஷ்குமார் தொடங்கிவைத்தார்.

---------------

சேலம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கோலப்போட்டிகள் நடத்தப்பட்டன.

----------------

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் அருகே மினி சரக்கு வாகனம் மீது லாரி மோதி ஏற்பட்ட விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

-------------

மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி கோவிலில் கார்த்திகை மாத முதல் நாளான இன்று மூன்று தீர்த்த குளங்களில் சிறப்பு தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெற்றது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

மும்பை சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆதில் கல்யாண்பூர் - பிரஜ்வால் தேவ் இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-4, 4-6, 10-7 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் ஆதித்யா கணேசன் - இந்தியாவின் ஆரியன் ஷா இணையை வென்றது.

----------

பீகாரில் நடைபெற்ற ஆசிய சாம்பியன் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில், இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் சீனாவை வென்றது.

**<<<<<<END>>>>>**